**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா.பாலமுருகன், B.Com., B.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ஆம் நாள் வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.174/2022**

முத்துலெட்சுமி ..... வாதி

**//எதிர்//**

1) கணேசன் (எ) அரியதம்பி

2) முனியப்பன்

3) சண்முகம்

4) பழனியம்மாள்

5) சரவணன் (Amended as per order in I.A.No.03/2023 dated 06.07.2023)

6) கிருஷ்ணன் (எ) வீரபத்திரன்

...... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 13.03.2024ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தால் தோன்றாத்தரப்பினர்களாகக் கொண்டும், வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

தாவா சொத்தை நல இழப்பம் சரிக்கட்டி 3 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதியின் தனிபட்ட சுவாதீனத்தில் விட முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், சர்வே எண்.495 உட்பிரிவு எண்.495/1F 0.10 செண்ட் நிலத்தை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த 22.11.2006ம் தேதிய கிரைய ஆவண எண்.1472 செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்**

1. வாதியின் தந்தை 1ம் பிரதிவாதி. 2ம் பிரதிவாதி வாதியின் உடன் பிறந்த சகோதரர். வாதியின் தாயார் இறந்துவிட்டார். 3 முதல் 6 பிரதிவாதிகள் வாதியின் அனுமதியில்லாமல் தாவா சொத்தை கிரையம் பெற்றவர்கள். தாவா சொத்து ஆதியில் வாதியின் தந்தை வழி பாட்டி மூக்காயி என்பவரது பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வந்து மூக்காயி இறப்பிற்கு பின் அவரது வாரிசுகளால் வாய்கறாராக பாகப்பிரிவினை செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார். தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா எண்.3529 என்ற எண்ணில் கீழப்பகுதி கிராமம் புல எண்.495/1C 0.21 ஏர்ஸ், 495/1F 0.18.20 ஏர்ஸ் நிலம் பாகமாக ஏற்பட்டு 1ம் பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா எண்.3529 ஏற்பட்டுள்ளது. தாவா சொத்தில் புல எண்.495/1F 0.18.20 ல் 1ம் பிரதிவாதி மேற்படி புல எண் உட்பிரிவு செய்வதற்கு முன்பு 2006 ம் ஆண்டு மேற்படி கிராமம் புல எண்.495 ல் 1ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதி மைனர் என்பதை கட்டுப்படுத்தி தாவா சொத்தில் 10 செண்ட் நிலத்தை வாதிக்கு தெரியாமல் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளார். தாவா சொத்தை விற்பனை செய்த சமயத்தில் வாதி மேஜர் பெண் ஆவார். இந்நிலையில் தாவா சொத்தில் வாதிக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை வாதியின் அனுமதி இல்லாமல் ஏற்படுத்திய கிரையம் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது. வாதி தனக்கு கிடைக்க வேண்டிய பாகத்தை 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடம் பல முறை நேரில் சென்று கேட்டுள்ளார். ஆனால் 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க மனம் இல்லாமல் காலம் கடத்தி வந்தனர். ஊர் பெரியவர்கள் மூலம் பேசியும் 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கு கொடுக்க வேண்டிய பாகத்தை கொடுக்க தயாராக இல்லை. எனவே, தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வாதி தரப்பில், வாதி முத்துலெட்சுமி என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை. பிரதிவாதிகள் வழக்கின் ஆரம்ப நிலையிலிருந்து தோன்றாத்தரப்பினர்களாக உள்ளனர்.

3. தாவா சொத்தை நல இழப்பம் சரிக்கட்டி 3 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதியின் தனிபட்ட சுவாதீனத்தில் விட முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், சர்வே எண்.495 உட்பிரிவு எண்.495/1F-ல் 0.10 செண்ட் நிலத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 22.11.2006 ம் தேதிய கிரைய ஆவண எண்.1472 செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி மற்றும் பிரதிவாதிகளின் உறவுமுறையை காட்டக்கூடிய வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளது வா.சா.ஆ.1 ன் மூலமாகவும், 22.11.2006 ம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து கிரையப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளது வா.சா.ஆ.2 ன் மூலமாகவும், தாவா சொத்திற்கான புலப்படம் தாக்கல் செய்துள்ளது வா.சா.ஆ.3 ன் மூலமாகவும், வாதியின் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்துள்ளது வா.சா.ஆ.4 ன் மூலமாகவும், தாவா சொத்திற்கான 11.11.1975 ம் தேதி முதல் 25.11.2022 ம் தேதி வரைக்கான வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளது வா.சா.ஆ.5 ன் மூலமாகவும், புல எண்.495/1C மற்றும் 495/1F ல் உள்ள சொத்திற்கு 1ம் பிரதிவாதி கணேசன் பெயரில் பட்டா உள்ளது வா.சா.ஆ.6 ன் மூலமாகவும், வாதியின் பாட்டி மூக்காயி அம்மாள் என்பவர் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளது வா.சா.ஆ.7 ன் மூலமாகவும், வாதியன் குடும்ப அட்டை பழையது தாக்கல் செய்துள்ளது வா.சா.ஆ.8 ன் மூலமாகவும் துலங்குகிறது.

4. தாவா சொத்தில் உள்ள வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் பொருட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது காணமுடிகிறது. மேற்படி வாதி தரப்பு வழக்கை மறுத்துரைக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை. பிரதிவாதிகள் வழக்கின் ஆரம்ப நிலையிலிருந்தே தோன்றாத்தரப்பினர்களாக உள்ளதால் வாதி தரப்பு வாதம் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரிய 1/3 பங்கு பாகத்திற்கு முதல்நிலை தீர்ப்பாணையும், வாதிக்கு தெரியப்படுத்தாமலும், வாதியின் அனுமதியில்லாமலும் சர்வே எண்.495 உட்பிரிவு எண்.495/1F-ல் 0.10 செண்ட் நிலத்தை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த 22.11.2006 ம் தேதிய கிரைய ஆவண எண்.1472

செல்லத்தக்கதல்ல என கேரிய விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்கூடியதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

தாவா சொத்தை நல இழப்பம் சரிக்கட்டி 3 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதியின் தனிபட்ட சுவாதீனத்தில் விட முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், சர்வே எண்.495 உட்பிரிவு எண்.495/1F ல் 0.10 செண்ட் நிலத்தை பொறுத்து 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த 22.11.2006 ம் தேதிய கிரைய ஆவண எண்.1472 செல்லத்தக்கது அல்ல என விளம்புகை செய்தும் இவ்வழக்கு செலவுத்தொகையின்றி அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 14 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-R.தமிழரசி

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**

**வாதி தரப்பு சாட்சி**

வா.சா.1 திரு. முத்துலெட்சுமி ( வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | வம்சாவழி பட்டியல் |
| வா.சா.ஆ.2 | 22.11.2006 ம் தேதி 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திய கிரையப்பத்திரம் பதிவு நகல் |
| வா.சா.ஆ.3 | தாவா சொத்திற்கான புலப்படம் உண்மை நகல் |
| வா.சா.ஆ.4 | வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| வா.சா.ஆ.5 | தாவா சொத்திற்கான 11.11.1975 ம் தேதி முதல் 25.11.2022 ம் தேதி வரைக்கான வில்லங்க சான்று இணைய நகல் |

| | |
|---|---|
| வா.சா.ஆ.6 | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா கணிணி நகல் |
| வா.சா.ஆ.7 | வாதியின் பாட்டி மூக்காயி அம்மாள் தாவா சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.8 | வாதியின் பழைய குடும்ப அட்டை |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் - இல்லை**

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் - இல்லை**

Sd/-R.தமிழரசி

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**